நீதிமான் மரிப்பது போல நான் மரிப்பேனாக!

VOLUME - 1

நீதிமான் மரிப்பது போல நான் மரிப்பேனாக !

மறைந்த தேவ மனிதர்களின் கடைசி நாட்கள்...

AN ARTICLE BY

அடைபட்ட
அக்கினி

Pastor. Romilton
Delhi
Mob: +91 98106 46981

அட்டவணை

04 - 09
டேவிட் ப்ரெய்னார்ட்

10- 14
ஸ்மித் விக்கிள்ஸ்வொர்த்

15 - 23
டேவிட் லிவிங்ஸ்டன்

24 - 33
ஜாண் வெஸ்லி

24 - 40
அன்பின் அப்போஸ்தலன் யோவான்

41 - 54
அப்போஸ்தலனாகிய பவுல்

நீதிமான் மரிப்பது போல நான் மரிப்பேனாக !

டேவிட் பிரெய்னார்ட்

டேவிட் பிரெய்னார்ட்

(1718 - 1747)

அமெரிக்கச் செவ்விந்தியர்களுக்காகத் தன் ஆத்துமாவை மரணத்தில் ஊற்றிய தேவமனிதன்..

மேன்மையாய் உயர்த்தப்பட்டு, யாக்கோபின் தேவனால் அபிஷேகம் பெற்று, இஸ்ரவேலின் சங்கீதங்களை இன்பமாய்ப் பாடின ஈசாயின் குமாரன் தாவீதின் கடைசி வார்த்தைகள் முதற்கொண்டு... (2 சாமு 23:1)

தங்கள் விசுவாசத்தைக் காத்துக்கொள்ளும் வாழ்க்கைப் பயணத்திலே, யுரோக்கிலிதோன்கள் பல கண்டு, புறம்பான மனிதன் நாளுக்கு நாள் அழிந்தாலும், உள்ளான மனிதன் நாளுக்கு நாள் பெலனடைந்து, நல்ல போராட்டம் போராடி, ஓட்டத்தை முடித்து, விசுவாசத்தைக் காத்துக்கொண்டு, ஆவிக்குரிய நித்திய உயிர்ச்சேதமின்றி, மெலித்தாவின் மெல்லிய கரை கண்டு, பத்திரமாய்ப் பரலோகம் சென்று ... இராயனுக்கெல்லாம் இராயனாம் இயேசு ராஜன் முன்பாகத் தாங்கள் நிற்குமுன்னே..

பூலோகத்தார் யாவரும் போகிற வழியிலே போன பரிசுத்தவான்கள் பலர், தங்கள் கடைசி நாட்களில் கடைசியாகச் சொல்லிவைத்துப் போன வார்த்தைகள் ...

1. டேவிட் பிரெய்னார்ட் : (1718 - 1747)

(அமெரிக்கச் செவ்விந்தியர்களுக்காகத் தன் ஆத்துமாவை மரணத்தில் ஊற்றிய மனிதன்..)

மெலிந்த தேகம்... வாலிப வயது ...அமெரிக்காவின் கடும்பனி பொழிவுக்காலம்.. கழுத்து வரை பனி பெய்திருந்தாலும் அதின் நடுவிலும் நடந்து செல்வார் செவ்விந்தியர்கள் மத்தியிலே...காலை முதல் மாலை வரை அவர்களுக்காக ஜெபத்தில் போராடிப் போராடி வாயிலிருந்தும் மூக்கிலிருந்தும் இரத்தம் கொப்பளிக்கும்..

காச நோய்க்கு மருந்து இல்லாத அந்நாட்களில் தனது 29ம் வயதிலேயே படுத்த படுக்கையாகிறார் டேவிட் பிரெய்னார்ட் ..அவரது உடல், நோயினால் அரிக்கப்பட்டு அழிந்து கொண்டிருந்த போது மாபெரும் ஆத்தும ஆதாய வீரனான யோனத்தான் எட்வர்ட்ஸ் அதைப் பார்த்துக் கொண்டிருந்தார். எட்வர்ட்ஸ் அதைப் பின்வருமாறு எழுதுகிறார்...

"தேவனுடைய சித்தப்படி, பிரெய்னார்ட் தன் வாழ்வின் கடைசி நாட்களை என்னுடைய வீட்டில் செலவிட்டு மரித்ததற்காக நான் தேவனைத் துதிக்கிறேன். நான் அவருடைய ஜெபங்களைக் கேட்டு, அவரது அர்ப்பணிப்பைக் கண்டு அவருடைய முன்மாதிரியால் தொடப்பட்டேன்.."

பிரெய்னார்டு இறந்த போது ஜாண் வெஸ்லி தன் ஆவிக்குரிய ஊழியத்தின் துவக்க காலத்தில் இருந்தார். "ஆண்டவரின் ஊழியம் மங்கிப் போன இடத்தில் அதை மீண்டும் உயிர்ப்பிக்க என்ன செய்ய வேண்டும்?" என்று யாரோ ஒருவர் வெஸ்லியைக் கேட்க, ஓய்வின்றி உழைத்து மூன்று நாடுகளை உலுக்கிய சுவிசேஷகனாகிய வெஸ்லி சொன்னார்.."ஒவ்வொரு பிரசங்கியும் டேவிட் பிரெய்னார்டின் வாழ்க்கை சரித்திரத்தைப் படிக்க வேண்டும்.."

இவரை ஆவிக்குரிய கிறிஸ்தவ உலகின் ஹீரோ என்று சொல்வதா? ஆவிக்குரிய ஜாம்பவான் என்று சொல்வதா? அல்லது கடந்த கால ஆவிக்குரிய இராட்சதர்களில் ஒருவர் என்று சொல்வதா? என்ன சொன்னாலும் பொருந்தும்.

தன் பெயர் சொல்ல அவர் ஒரு புத்தகம் எழுதிவைத்துச் செல்லவில்லை.. அல்லது ஒரு சபையையோ சங்கத்தையோ ஸ்தாபனத்தையோ ஸ்தாபித்துச் செல்லவில்லை - தலைமுறை தலைமுறையாய்த் தன் பெயரை நிலைநாட்ட.... ஆனாலும் சுமார் 275 வருடங்கள் முன்பு மரித்த இந்த ஜெபவீரன், மரித்தும் இன்னும் வாழ்கிறார் மக்கள் மனங்களில்..

அவர் விட்டுச் சென்றதெல்லாம், அன்றாடம் தன் ஆண்டவரோடு சஞ்சரித்த தன் அனுபவங்களும், அங்கலாய்ப்பின் ஜெபம் நிறைந்த பக்கங்கள் பதிந்த தனது டைரி ஒன்றையே!

அவர் தனது டைரியில் எழுதி வைத்துப் போன அவரது கண்ணீரின் எழுத்துக்களும் ஜெபத்தின் அக்கினியும் "ஜாண் வெஸ்லி" என்ற வாலிபனைப் பற்றிப் பிடிக்க, அதைத் தொடர்ந்து எழும்பியது "மெத்தடிஸ்ட்" சபை. "ஒவ்வொரு மெத்தடிஸ்ட் ஊழியரும் டேவிட் ப்ரெய்னார்டின் ஒப்பற்ற அந்த டைரியை அவசியம் படிக்கும்படி செய்" என்று தன் சகோதர் சார்ல்ஸ் வெஸ்லிக்கு எழுதினார் ஜாண் வெஸ்லி.

தன் வாழ்வின் சுகவீனப்பட்ட கடைசி நாட்களை தேவ மனிதர் யோனத்தான் எட்வர்ட்ஸின் வீட்டில் கழித்த ப்ரெய்னார்டின் பழைய டைரிகள் கவனக்குறைவினால் எரிக்கப்பட்டுப்போனாலும், எஞ்சியிருந்த டைரிகளின் பக்கங்களில் இன்னும் நெருப்பு எரிந்துகொண்டு தான் இருந்தது!

அதுவே பிரைட்டன் ராபர்ட்ஸனைப் பற்றிப்பிடிக்க, வாக்குவல்ல பிரசங்கியானார் அவர்!

பிரெய்னார்டின் டைரியைப் படித்த போஸ்ட்டனின் Dr.A.J. ஜோர்டன், பிரெய்னார்டின் கல்லறை நோக்கிக் கழுத்தளவு பனிக்குள்ளே நடந்து சென்று அந்தக் கல்லறையின் முன் கண்ணீரோடு தலைகுனிந்து நிற்க.. அன்று முதல் அவரது ஊழியமே வேறு ஒரு பரிமாணத்தின் உயரத்துக்குச் சென்றது..

பிரெய்னார்டின் வாழ்க்கை சரிதையை வில்லியம் கேரி வாசித்தார். அது அந்த இளம் ஆத்தும ஆதாய வீரனின் உள்ளத்தில் ஒரு கிளர்ச்சியை உருவாக்க...அது அவரை இந்தியக் கரையோரம் கொண்டு வந்து சேர்த்தது.

பிரெய்னார்டின் உருகி நின்ற ஆத்துமாவிலிருந்து Edward Paysonன் வாழ்க்கை தேவனால் ஒளியேற்றப்பட்டது. இவ்விதம், வட அமெரிக்க இந்தியர்களின் அப்போஸ்தலனாகிய பிரெய்னார்டின் நாட்குறிப்பிலிருந்து தனது ஆரம்ப ஆர்வத்தைப் பெற்ற Payson, தனது இருபதாம் வயதில் பிரெய்னார்டையும் தோற்கடிக்கும் வகையில் ஜெப வாழ்க்கை ஒன்றை ஆரம்பித்தார்...

ஆவிக்குரிய உலகில் பிரெய்னார்டின் இன்னொரு கனியாக இராபர்ட் மர்ரே மச்செய்ன் என்ற பக்தனைக் கூறலாம். இவரும் ஒரு ஜெப வீரனாக வாழ்ந்து தனது 29ம் வயதில் "பூரண வயதுள்ளவராய்" மரித்தார். நமது ஆத்துமா இவ்வுலகில் வகிக்கக்கூடிய பதவிகளிலெல்லாம் மேலான பதவியான "உன்னத ஜெப வாழ்க்கைக்கு" மச்செய்ன் கவர்ந்திழுக்கப்பட்டது, பிரெய்னார்டின் நாட்குறிப்பை வாசித்ததின் மூலமாகவே!

பிரெய்னார்டின் கடைசி வார்த்தைகள்
(அக்டோபர் 2, 1747....)

தான் மரிப்பதற்கு ஒரு வாரம் முன்பு தனது டைரியில் எழுதுகிறார் பிரெய்னார்ட்...

"என் ஆத்துமா இன்று தேவனோடு இனிமையாய் ஒன்றியிருக்கிறது. அவரது மகிமையைக் காணும்படியாய் அவரோடு இருக்க என் மனம் ஏங்குகிறது. நான் அதிகமாய் நேசிக்கும் நண்பர்களையும், என் ஆத்துமாவுக்குப் பிரியமான சபையையும், எனக்கு உண்டான யாவற்றையும் இன்பமாய் அவருக்கு அர்ப்பணித்து அவரது கரங்களில் தருகிறேன். அவரது ராஜ்யம் இவ்வுலகில் வரும்படிக்கும், அவர்கள் யாவரும் அன்பாய் இருக்கவும், அவரை மகிமைப்படுத்தவும், நேச இரட்சகர் தன் ஆத்தும பலனைக் கண்டு திருப்தியாகவும் சகலத்தையும் அவருக்கே அர்ப்பணிக்கிறேன்!

ஓ இயேசுவே! சீக்கிரம் வாரும்!ஆமென்!

பிரெய்னார்டின் கல்லறைக் கல்வெட்டு

"சஸ்க்யூஹென்னாவின்" பழங்குடி செவ்விந்தியருக்கு அப்போஸ்தலனும், இவ்விடத்தில் மரித்த உண்மையும் உத்தமமுமான ஊழியனான கனத்துக்குரிய டேவிட் பிரெய்னார்டின் பரிசுத்த ஞாபகார்த்த கல்லறை...

STOCK BRIDGE, DELAWARE... Oct 9, 1747.

"ஒரே ஒரு மனிதன் கிறிஸ்தவ உலகில் இத்தனை பெரிய தாக்கத்தை ஏற்படுத்தி இருப்பானானால், இவனைப் போல ஒரு சேனையே எழும்பினால் அது என்னென்னவெல்லாம் செய்யும் என்று எண்ணிப் பார்ப்பீர்களா?

- Rev. Leonard Ravenhill

நீதிமான் மரிப்பது போல நான் மரிப்பேனாக !

ஸ்மித் விக்கிள்ஸ்வொர்த்
1859 - 1947

ஸ்மித் விக்கிள்ஸ்வொர்த்

(தேவனின் முரட்டு பக்தன்)

மார்ச் 12.. 1947...

ஸ்மித் விக்கிள்ஸ்வொர்த் அவர்களின் நண்பரும் போதகருமான Rev. ரிச்சர்ட்ஸன் அவர்களின் அடக்க ஆராதனை..

ஆலயம் ஜனங்களால் நிரம்பி இருக்கிறது.. 87 வயதானாலும் தனது அறுபதுகளில் இருக்கும் ஒரு திடகாத்திரமான சரீரம் கொண்ட நேர் உருவமாய், நேரே வந்து பீடத்துக்குக் கீழே இருக்கும் இருக்கைகளின் இரண்டாம் வரிசையில் கெம்பீரமாய் வந்து அமர்கிறார் விக்கிள்ஸ்வொர்த்...

சபையார் யாவரது கண்களும் அவரையே நோக்கி நிற்கிறது...அருகிலிருந்த நண்பர் ஒருவரை அன்புடன் அணைத்தவராய், அவரது சுகவீனமான மகளின் நலம் விசாரிக்கிறார்.. நண்பரோடு பேசிக்கொண்டிருக்கும் போதே அப்படியே கீழே சரிகிறார்.. அவரைக் கைத்தாங்கலாய்த் தாங்கிய நண்பரின் கரங்களிலேயே விக்கிள்ஸ்வொர்த்தின் உயிர் பிரிகிறது..

தனது நண்பரும் போதகருமான ரிச்சர்ட்ஸனின் அடக்க ஆராதனை ஆரம்பிக்குமுன்னே, மரணத்துக்கான எந்த அறிகுறியுமின்றி ஆலயத்தில் தேவ சமூகத்திலேயே தேவன் அவரை எடுத்துக்கொள்கிறார்..

Rev. ரிச்சர்ட்ஸனின் அடக்க ஆராதனையை நடத்த வந்த போதகரும், விக்கிள்ஸ்வொர்த்தின் மருமகனுமான ஜேம்ஸ் சால்ட்டர், அங்கேயே அவரது மரணத்தை அறிவிக்க..சபை ஸ்தம்பித்து நிற்கிறது..

அவர்கள் கண்களுக்கு முன்னால் சில நிமிட நேரம் முன்பு தான் நிமிர்ந்த நடையோடு முன் சென்று அமர்ந்தார்..எந்த நோய் நொடியும் வலியுமில்லை. நிமிடங்களுக்குள் எல்லாமே முடிந்தது. உடனடியாக வரவழைக்கப்பட்ட மருத்துவர் அவரது மரணத்தை உறுதி செய்தார்..

ஸ்மித் சொல்லியிருந்தார்.."என் ஜீவனிலும் மரணத்திலும் வைத்தியன் கத்தி என் சரீரத்தில் படுவதில்லை." என்று.. அதன்படியே அவருக்கு அமைந்தது !

அவரது மரணத்துக்கு சரியாக ஒரு வாரம் முன்பு...

அவரது வாழ்க்கைச் சுருக்கத்தை எழுதிய Albert Hibbert ம், ஸ்மித் விக்கிள்ஸ்வொர்த்தும் ஸ்மித்தின் வீட்டில் இரவு உணவின் போது பேசிக்கொண்டிருக்கின்றனர்...

ஸ்மித் தன் கண்களில் கண்ணீர் நிறைந்தவராய், அவரைப் பார்த்துக் கேட்கிறார்..
“நீ இது வரை எட்டியிராத ஆவிக்குரிய எல்லையை எப்போது நீ கடந்து...நீ இதுவரை தொட்டிராத உன்னத சிகரங்களை எப்போது தொடப்போகிறாய்?"

ஒரு படிப்பறியா ப்ளம்பராயிருந்து, "என் ஊழியன்" என்று தேவனால் அடைமொழியிடப்பட்டு, "விசுவாச அப்போஸ்தலன் " என்று மக்களால் அழைக்கப்பட்டு, தன் ஊழியத்தில் தனது மனைவி பாலி உட்பட, மரித்த 27 பேரை உயிரோடு எழுப்பின ஒரு அனாயாசமான விசுவாச வீரர் இவர்...

இங்கிலாந்து சபையில் கிளைச்சபைகளின் உதவிப் போதகர் ஒருவருடன் ஸ்மித் ஒரு இரவு உணவு அருந்திக்கொண்டிருந்த போது, அலங்கார வாசல் பிறவி முடவனைப்பற்றி பேச்சு எழுகிறது..

பிறகு தான் தெரிகிறது, அந்த உதவிப் போதகரே இரண்டு கால்களும் இழந்த ஊனமுற்றவர் என்று...

உணவு வேளை முடிந்து இருவரும் அவரவர் அறைக்குச் செல்லுமுன் விக்கிள்ஸ்வொர்த் சொல்கிறார்.."நாளை காலை போய் உங்களுக்கு ஒரு ஜோடி ஷூ வாங்கிக் கொள்ளுங்கள்..என்னைப்போன்று.." என்று..

அன்றிரவு தூக்கமில்லை உதவிப் போதகருக்கு...
" என் ஊழியன் சொன்னபடி செய்" என்றார் கர்த்தர்.

அடுத்த நாள் காலை கடை திறக்குமுன்னே போய் நிற்கிறார்.. கடை திறந்ததும் சேல்ஸ்மேன் கேட்கிறார்.."என்ன நம்பர் ஷூ வேண்டும்?"
"பத்தாம் நம்பர்"
அவரது காலைப் பார்க்கிறார் கடைக்காரர். இரண்டு கால்களும் இல்லை. இப்படிப்பட்ட ஸ்பெஷல் ஷூ எங்களிடம் இல்லை" என்று சொல்ல, "இல்லை, எனக்கு உங்களைப் போன்ற பத்தாம் நம்பர் ஷூவே வேண்டும் என்று கேட்க... உள்ளே போய் அதைக் கொண்டு வருவதற்குள் ஒரு அற்புதம் நிகழ்கிறது. சூம்பிப் போன கால்கள், எலும்பும் சதையுமான ஒரு உயிருள்ள கால்களாய், பாதங்களாய் மாறுகிறது.

ஸ்மித் விக்கிள்ஸ்வொர்த் சொல்வார்...

"தேவனைப் பொறுத்தமட்டில் கால்கள் அற்றவனுக்குக் கால்கள் கொடுப்பதும், உடைந்த எலும்பைக் குணமாக்குவதும் ஒன்றுதான். அவருக்கு பல்வலியைக் குணமாக்குவதும், செத்தவனை உயிரோடு எழுப்புவதும் - இரண்டும் ஒன்றுதான்! வித்தியாசமே இல்லை!

விக்கிள்ஸ்வொர்த்தின் கல்லறைக் கல்வெட்டு

பிறப்பு : 1859

இறப்பு : 1947

வயது : 87

நல்ல போராட்டத்தைப் போராடினேன்...
விசுவாசத்தைக் காத்துக் கொண்டேன்...
அது அவர்களைப் பின் தொடரும் விசுவாசம்...

I have fought a good fight..
I have Kept the fight...
Whose faith follow...

நீதிமான் மரிப்பது போல நான் மரிப்பேனாக !

டேவிட் லிவிங்ஸ்டன்

டேவிட் லிவிங்ஸ்டன்
1813-1873

ஆப்பிரிக்காவின் முன்னோடி மிஷினரி

ஸ்காட்லாந்திலே க்ளாஸ்கோவுக்கு ஒன்பது மைல் தூரத்தில் டேவிட் லிவிங்ஸ்டனுக்கு ஒரு பெரிய ஞாபகார்த்த மண்டபம் உள்ளது..

அதிலே அந்த தேவ மனிதன், ஆப்பிரிக்காவில் தங்கியிருந்து வருஷக்கணக்காக ஜெபித்து ஊழியம் செய்து வந்த அவரது வீட்டு மாடல் ஒன்று இருக்கிறது..

அதைப் பார்த்தால் இந்தியாவில் கூரை வேய்ந்த சிறு குடிசை மாதிரி ஒரு சிறிய வீடு..

அதிலே ஒரு சிறிய கட்டில்.அது கட்டில் கூட அல்ல..இரண்டு மூங்கில் கம்புகளுக்கு நடுவில் இலைகளை வைத்துத் தைத்த ஒரு படுக்கை..பக்கத்தில் ஒரு மெழுகுவர்த்தி எரிகிறது..

அதின் அருகில் டேவிட் லிவிங்ஸ்டன் முழங்காலில் ஜெபிக்கிற ஒரு மாதிரியை செய்து வைத்திருக்கின்றனர்..

அந்தக் குடிசையில் ஒவ்வொரு இரவும் தன் கைகளை உயர்த்தி.."தேவனே இந்த உலகத்தின் பாவத்தின் ரணங்கள் குணமாகாதோ??" என்று கதறி ஜெபித்தார் அந்த தேவ மனிதர்...

ஆப்பிரிக்காவில் அடிமை வியாபாரம் கொடிகட்டிப் பறந்து கொண்டிருந்த அந்த நாட்களில் போர்ச்சுக்கீசியருக்கு எதிருக்கு எதிர் சமர் நின்றார் லிவிங்ஸ்டன்..

இன்னும் அந்த மனிதர் பட்ட பிரயாசங்களும் அலைச்சல்களும் வனவிலங்குகளிடம் பட்ட காயத்தின் தழும்புகளும் தேவனின் ஞாபகப்புத்தகத்தில் அல்லவோ இருக்கிறது!!

ஒரு முறை காட்டில் சிங்கம் தாக்கி அவரது முகத்தாடையின் ஒரு பக்கமே சேதமானது..

ஏன் இதெல்லாம்?

அவரும் ஒரு கெத்சமெனியின் அனுபவத்தினூடே கடந்து சென்றார்..தனக்கென்று கொடுக்கப்பட்ட கசப்பான பாத்திரத்தில் நிச்சயமாகவே பானம் பண்ணினார் லிவிங்ஸ்டன்..

இறந்த தன் அன்பின் மனைவியைத் தன் கையாலேயே காட்டில் அடக்கம் பண்ணினார்..

அவர் பெற்ற பிள்ளை இறந்தது..அதின் தாயின் அருகில் அதையும் கிடத்தினார்..இன்னொரு பிள்ளை இறந்தது..அதையும் தன் கைகளினாலே அடக்கம் பண்ணினார்..

ஆனால் அந்தத் துக்கத்தின் திரளான வெள்ளம் அவருக்குள் இருந்த நேச அக்கினியை அவித்துப் போட முடியவில்லை..

மாறாக அந்த துக்கம் அவருக்குள் இருந்த அக்கினியைக் கொழுந்துவிட்டு எரியச் செய்யும் எரிபொருளாகவே மாறியது..

பிசாசு அவரது வேலையை தடை செய்யச் செய்யத் தன் ஜெபத்தைக் கூட்டினார் லிவிங்ஸ்டன்..

இரவெல்லாம் அவரது ஜெபத்தின் கதறுதல் அந்த ஆப்பிரிக்க் காடுகளில் எதிரொலித்துக் கொண்டே இருந்தது..

“தேவனே,இந்த உலகத்தின் பாவத்தின் இரணத்தைக் குணமாக்க மாட்டீரோ ?"

இப்படியும் ஒரு மனிதனா?

ஸ்காட்லாந்தின் Blantyre நகரம்.. 1813..
பக்தியுள்ள ஒரு குடும்பத்தில் பிறக்கிறார் லிவிங்ஸ்டன்..

விபரம் தெரியவந்த வயதுகளில் ஒன்றில், "தேவனுக்காக சாதனை படைத்த பத்து மிஷினரிகள்" என்ற வரலாற்றுப் புத்தகம் ஒன்றைக் கொடுத்து, "முழங்காலிலேயே இதைப்படி.." என்கிறார் அவரது தகப்பனார்..அதில் Butalaf என்ற டென்மார்க் மெடிக்கல் மிஷினரி ஒருவரின் வரலாறு அந்த சிறு பையனின் மனதை ஆழமாய்த் தொட, "ஒரு நாள் நானும் இவரைப் போலவே டாக்டரும் மிஷினரியும் ஆவேன்.." என்று தன் தகப்பனாரைப் பார்த்துச் சொல்கிறார் சின்ன லிவிங்ஸ்டன்.

தன் முழங்காலிலேயே வளர்ந்த அந்த வாலிப நாட்களில் ஒரு நாள் இப்படி ஜெபிக்கிறார்.."ஆண்டவரே, நீர் அனுப்பும் எங்கு வேண்டுமானாலும் நான் செல்வேன், ஆனால் நீர் மட்டும் என்னோடு வர வேண்டும்...ஆண்டவரே, எப்பேர்ப்பட்ட உமது பாரத்தையும் என் மேல் வையும் - ஆனால் நீர் மட்டும் என்னைத் தாங்கினால் போதும்.. ஆண்டவரே, எப்படிப்பட்ட உலகப் பிணைப்புகள் என்னில் இருந்தாலும், எல்லாவற்றையும் அறுத்து எறிந்துவிடும் - உம்முடைய இருதயத்தோடும், நீர் என்னை நம்பி ஒப்படைக்கும் உமது ஊழியத்தோடும் மாத்திரமே நான் கட்டப்பட்டிருப்பேனாக!"

இந்த ஜெபத்தை ஏறெடுத்து முடித்த மாத்திரத்திலேயே, "இதோ, உலகத்தின் முடிவுபரியந்தமும் ஆகல நாட்களிலும் நான் உன்னுடனேகூட இருக்கிறேன்" என்ற வார்த்தை அவரது செவிகளில் அசரீரியாய் தொனிக்க... உடனே புறப்பட்டார் இருண்ட கண்டமாகிய ஆப்பிரிக்காவுக்கு ...

ஆப்பிரிக்காவில் தான் கால் வைத்த அந்த முதல் நாள் காலை அனுவத்தைத் தன் டைரிக்குறிப்பில் அவர் எழுதுகிறார்..

ஓ! அந்த நாளின் காலை சூரியக்கதிர்கள் அதோ தூரமான அந்த ஆயிரக்கணக்கான கிராமங்கள் மேல் விழ, கிராமங்களின் அடுப்புகளிலிருந்து மேலெழும்புகையும் நெருப்பும் என் இருதயத்தை அந்த ஜனங்களுக்காக அக்கினியாய்க் கொழுந்துவிட்டு எரியச் செய்தது.."

அவர் மணந்தது, இங்கிலாந்தின் புகழ்பெற்ற மொஃபட் குடும்பத்துப் பெண் மேரியை..மேரியின் தகப்பனாரும் ஒரு மிகச்சிறந்த மிஷினரியே!

லிவிங்ஸ்டனின் ஊழியம், இயேசுவை அறியாத ஆயிரமாயிரம் ஆப்பிரிக்கர்களுக்கு அவரை அறிவிப்பதோடு ஆப்பிரிக்காவின் கண்டுபிடிக்கப்படாத பரந்து விரிந்த நிலப்பரப்புகளையும் எல்லைகளையும் ஆய்வு செய்து கண்டுபிடிப்பதுமாகவே இருந்தது.. இதில் அவர் செய்த நீண்ட பிரயாணங்களும் பட்ட கஷ்ட நஷ்டங்களும் கொஞ்சநஞ்சமல்ல.. இடம் விட்டு இடம் பெயர்ந்து பயணப்பட்டுக் கொண்டே இருந்த அவரது ஆய்வுப்பணிக்கும் பிரயாணங்களுக்கும் ஈடு கொடுக்க முடியாத அவரது பச்சிளங்குழந்தைகள் அடுத்தடுத்து நோயினால் மரிக்க...இதனால் அதிகம் பாதிக்கப்பட்ட தன் இளம் மனைவியைப் பார்த்து ஒரு நாள் லிவிங்ஸ்டன் சொன்னார்..."மேரி! நீ இப்போதைக்கு இங்கிலாந்துக்குத் திரும்பிப் போய், மீதியிருக்கும் பிள்ளைகள் சற்று வளரும் வரை அவர்களைக் கவனித்துக் கொள்..நான் சீக்கிரமே வந்து உன்னைச் சந்திப்பேன்.." என்று சொல்லிவிட்டு அவர்களைத் தனது தாய் நாட்டுக்கு அனுப்பி வைக்கிறார்..

ஐந்து வருடங்கள் கழிகிறது...

தானும் சில நாட்களுக்காக இங்கிலாந்து வருகிறார்.. மனைவியும் கூட அவரை அடையாளம் காண இயலாத அளவு ஐந்து வருடங்களில் அவரது முகரூபமே மாறிப்போயிருந்தது.. காட்டுமரம் ஒன்று அவர் மேல் விழுந்து ஒரு பக்கம் சேதமாயிருக்க, இன்னொரு தோள்பட்டையில் சிங்கம் ஒன்று பாய்ந்து அதினால் தோள் எலும்பு முறிந்து தாடை ஒன்றும் ஒரு பக்கம் சரிந்து போயிருந்தது. ஆப்பிரிக்கப் பேய் வெயிலில் சிவந்த மேனி கறுகறுத்து அடையாளம் தெரியாமல் உருமாறிப் போயிருந்தார் லிவிங்ஸ்டன்..

தன் மனைவியை சந்திக்க வரும் சற்று முன்பு தான் தன் தகப்பனாரையும் சந்திக்கச் சென்றிருந்தார் அவர்..ஆசையோடும் கனவுகளோடும் தன் ஆப்பிரிக்க அனுபவங்களைத் தன் சொந்த வாயால் அவரிடம் ஆவலாய் விவரிக்கச் சென்றவர் கண்டதோ...அந்தோ! தன் தகப்பனாரிடம் போய்ச்சேரும் அன்று சற்று முன்னர், தகப்பனார் தேவனிடம் போய்ச் சேர்ந்து விட்டிருந்தார். நெஞ்சு நிறைந்த தன் மிஷனரி அனுபவங்களைத் தனக்குள்ளே புதைத்து விட்டவராய், தன் கைகளினாலேயே அன்று தன் தகப்பனாரை அடக்கம் செய்து புதைத்த அவரது வேதனையை யார் அறிவார்?

மறுபடியும் ஆப்பிரிக்கா தன்னை அறைகூவி அழைக்க, மனைவி மக்களிடம் விடைபெற்றுக் கொண்டு,"பிள்ளைகள் பெரியவர்களாகும் வரை நீ அவர்களைக் கவனித்துக் கொள்.." என்று சொல்லி அவர்களை முத்தமிட்டுத் திரும்பினார், தன் இதயம் இருந்த இருண்ட தேசத்துக்கு...

நீண்ட காலத்துக்குப் பின் அவரது மனைவி அவரோடு இருக்க ஆப்பிரிக்கா வந்து சேர, அவர் ஆப்பிரிக்காவில் கால் வைத்த அன்றே, பயங்கரமான வியாதியால் பாதிக்கப்பட்டு, சில நாட்களிலேயே மரித்துப் போகிறார் மேரி. அப்போது லிவிங்ஸ்டனை சாட்சியாகக் கண்ட ஒருவர் சொல்கிறார்...

"என் இயேசுவே! என் ராஜனே! என் ஜீவனே! என் சகலமே! மீண்டுமாய் என் வாழ்வை உமக்கு அர்ப்பணிக்கிறேன்.. உம்மையும் உமது ஊழியத்தையும் தவிர இவ்வுலகில் எனக்கு வேறு ஒன்றும் வேண்டாம்... என் மனதை நான் வேறெதிலும் வையேன்.. என்னையே ஒப்படைக்கிறேன்.."

இதைச் சொல்லி முடிக்க...
ஆரம்பத்தில் ஒலித்த அதே வார்த்தைகள் மீண்டும் அவரது செவிகளில் ஒலிக்கிறது." "இதோ உலகத்தின் முடிவுபரியந்தம் சகல நாட்களிலும் நான் உன்னுடனே இருக்கிறேன்.."

ஒரு நாள் அவரது வீட்டிலிருந்து மருந்துகள் மற்றும் மருத்துவ உபகரணங்கள் கொண்ட அவரது medical kit திருடு போய் விட்டது. ஜெபிக்க ஆரம்பித்தார் லிவிங்ஸ்டன்.. ஜெபித்துக் கொண்டிருக்கும் போதே, யாரோ ஒரு மனிதர் அவரை சந்திக்க வருகிறார்..

வந்தவர் சொல்கிறார்.." என் பெயர் Henry M. Stanley. லண்டனிலிருந்து அனுப்பப்பட்டு, உங்கள் அனுபவங்களை நேரில் கண்டு புத்தகமாய் எழுத வந்திருக்கிறேன்..என் வேலையை நான் ஆரம்பிக்கு முன் இரண்டு காரியங்களை நான் உங்களுக்குச் சொல்லிவிட நினைக்கிறேன். ஒன்று..

நான் ஒரு கடவுளை நம்பாத நாஸ்திகவாதி.. எக்காரணம் கொண்டும் என்னை நீங்கள் மாற்ற முயற்சிக்கக் கூடாது.. இன்னொன்று..இதோ உங்களுக்காக யாரோ ஒருவர் கொடுத்தனுப்பியிருக்கும் Medical Kit..இதைப் பெற்றுக்கொள்ளுங்கள்.."

சரியாய் நான்கே மாதங்கள்..

லிவிங்ஸ்டனின் வாழ்க்கையையும் ஜெபத்தையும் கண்ட அந்த Henry Stanley, தன் வாழ்க்கையை இயேசுவுக்கு ஒப்புக்கொடுத்து அந்த ஆப்பிரிக்க மண்ணிலேயே தானும் மரிக்கிறார்..

இதற்குப்பின் மலேரியாவினாலும் இடைவிடாத இரத்தப் போக்கினாலும் பெலவீனப்பட்டு படுத்தபடுக்கையாகிறார் லிவிங்ஸ்டன்.அவரைக் கிராமத்துக்குக் கிராமம் ஸ்ரெட்சர் மாதிரி செய்யப்பட்ட ஒன்றிலே தூக்கிக் கொண்டே செல்கின்றனர். அந்நிலையிலும் விடாது இயேசுவை அறிவிக்கிறார் அவர்..

லிவிங்ஸ்டனின் கடைசி நிமிடங்கள்

ஒரு நாள் தானிருந்த ஊருக்குத் திரும்பிவந்த லிவிங்ஸ்டன், இனிமேல் எங்கும் செல்ல இயலாத நிலைக்கு ஆளாகி, ஒரு இரவு தன்னோடு இருந்தவர்களிடம்,"என்னை முழங்காலில் நிறுத்தி வையுங்கள் என்கிறார். அந்த நிலையிலும் ஜெபிக்கிறார்.."தேவனே! இந்த உலகத்தின் பாவத்தின் இரணத்தைக் குணமாக்கமாட்டீரோ?"

அந்த இரவு நேர நிசப்தத்தைக் கிழித்துக் கொண்டு அந்த ஆப்பிரிக்கக் காடுகளில் அவரது ஜெபம் எதிரொலிக்கிறது. அவரோ நெடுநேரம் முழங்காலிலேயே அசைவின்றி நிற்கிறார்..

அவரைப் படுக்க வைக்க உடனிருந்தவர்கள் அவரைத் தாங்கிய போது தான் தெரிந்தது.. ஜெபநிலையிலேயே முழங்காலில் அவர் பிரிந்து விட்டதென்று..

இன்றைய Zambia வும் அன்றைய வடக்கு ரோதேஷியாவுமான அந்த நாட்டின் சிட்டாம்பு கிராமத்திலேயே தான் நேசித்த அந்த ஆப்பிரிக்க மண்ணிலே அவரது இதயம் புதைக்கப்பட, அவரது சரீரமோ இங்கிலாந்தின் அரச குடும்பத்தினர் அடக்கம் செய்யப்படும் WEST MINISTER ABBEY யில் இங்கிலாந்தின் ராஜமரியாதையுடன் நல்லடக்கம் செய்யப்படுகிறது..

லிவிங்ஸ்டனின் கடைசி வார்த்தைகள்

"என் தனிமையிலே என்னால் செய்ய முடிந்ததெல்லாம் ஒன்றே! அமெரிக்கனோ, ஆங்கிலேயனோ, துருக்கியனோ அது யாராயினும் இவ்வுலகத்தின் பாவ இரணத்தைக் குணமாக்க உதவுபவர் யாராயிருந்தாலும் அவர்கள் ஒவ்வொருவர் மேலும் பரலோக ஆசீர் நிறைவாய்ப் பொழிவதாக!

டைரியில் எழுதி வைத்துவிட்டு ஜெபநிலையிலேயே ஜீவன் பிரிகிறது ...

பிறப்பு : 1813
இறப்பு : 1873
வயது : 60

நீதிமான் மரிப்பது போல நான் மரிப்பேனாக !



ஜாண் வெஸ்லி

ஜாண் வெஸ்லி

மெத்தடிஸ்ட் திருச்சபையின் ஸ்தாபகர்

மெத்தடிஸ்ட் திருச்சபை அமெரிக்காவில்
முளைத்தெழும்பிய ஆரம்பகாலம் அது..

அந்நாட்களில் ஒரு மனிதன் நீண்ட ஒரு பயணத்தைத் தன்
குதிரை மீதோ அல்லது கால் நடையாகவோ மேற்கொள்ள
விரும்பினால் அதை அவன் தன் உயிரைப் பணயம்
வைத்தே செய்ய வேண்டியதாயிருந்தது...

இயற்கைக்கு சவால்விட்டே அவன் தன் பயணத்தைத்
தொடங்க வேண்டியதாய் இருந்தது..

பேரிரைச்சலோடு ஓடும் ஆறுகள்..
அவயவங்களை விறைத்து மரத்துப்போகச் செய்யும்
கடுங்குளிர்..

பயங்கர வனவிலங்குகள்,
மனிதனைத் தின்னும் நரமாமிச செவ்விந்தியர்கள்..

இன்னும் எத்தனையோ இடர்பாடுகளை அவன் தன்
வழியில் சந்திக்க வேண்டியிருந்தது..

மனித சஞ்சாரமுள்ள ஓரிடத்திலிருந்து மற்றொரு
இடத்துக்குச் செல்ல அந்த நாட்களில் ஒரு நாளாவது
தேவைப்பட்டது..

ஆனால் ஆச்சரியமான காரியம் ஒன்று என்னவென்றால்..
எங்கெல்லாம் மனிதர்கள் வாழ்ந்தார்களோ,
அங்கெல்லாம் மெத்தடிஸ்ட் ஊழியர்களும் இருந்தனர்

அக்காலங்களில் அமெரிக்க விவசாயிகளின் வாயில் அடிக்கடி ஒரு பழமொழியைக் கேட்கலாம்..
அது உண்மையில் மிகப் பொருத்தமானதும் கூட..

கடுங்குளிர் காரணமாக நீரோடைகளின் தண்ணீர் பனிக்கட்டியாக உறைந்து, குளிரின் கொடுமை தாளாமல் மிருக ஜீவன்கள் ஒளிப்பிடம் தேடி ஓடி மறைகையில்,

மனிதர்கள் வெளியே சென்று வேலை செய்யக் கூடாதவர்களாய் அனல் அடுப்பின் அருகில் அமர்ந்து குளிர்காய்ந்து கொண்டிருக்கையில் அந்தப் பழமொழியைக் கூறுவார்களாம்...

" மனிதனாலும் மிருகங்களாலும் சகிக்க முடியாத கடுங்குளிர்.." என்று சொல்லிக் கொண்டே..
"அண்டங்காக்கைகளும் மெத்தடிஸ்ட் பிரசங்கிகளும் மட்டுமே காலம் தள்ளக்கூடிய சீதோஷ்ணநிலை..
"என்பார்களாம்..

உண்மை தான்..அப்போஸ்தலர்களின் காலத்திற்குப்பின் கிறிஸ்துவுக்காகத் தங்களைத் தியாகம் செய்து தேவ ராஜ்யத்திற்கென்று அயராது உழைத்தவர்கள் இந்த மெத்தடிஸ்ட் ஊழியர்கள் தான்..

மெத்தடிஸ்ட் சபையின் ஒரு ஊழியராக மாறுவது என்பது அந்த நாட்களில் அத்தனை சுலபம் அல்ல..

அந்தப் பிரசங்கிகள் அநேக ஆவிக்குரிய தேர்வுகளில் (practical ஆகவே) தேர்ச்சி அடைய வேண்டியது மிக மிக அவசியமாய் இருந்தது..

இப்படியும் நடக்குமா ?

இங்கிலாந்தில் உள்ள கார்ன்வால் என்ற இடத்தின் வழியே கடந்து சென்ற ஆங்கிலேயப் பிரபு ஒருவர், அங்கே மதுபானக் கடைகள் எதுவும் தென்படுமா என்று தேடித் தேடிப் பார்த்து அலுத்துப் போனவராக..

அந்தக் கிராமத்தைச் சேர்ந்த ஒருவரைக் கூப்பிட்டு.." ஏய்யா ? இந்த உங்கள் பாழாய்ப் போன கிராமத்தில் ஒரு க்ளாஸ் விஸ்கி கூட கிடைக்காதா? " என்று கேட்டார்..

அந்த முதியவர் தம்மிடம் கேள்வி கேட்ட அந்த அந்நிய மனிதர் ஒரு மதிப்பிற்குரிய மனிதர் என்பதை அறிந்து கொண்டவராக..

மரியாதையுடன் தமது தொப்பியைக் கழற்றி அவருக்கு வணக்கம் செலுத்தி விட்டு, பின்பு சொன்னார்..

"ஐயா..ஏறக்குறைய ஒரு நூறு ஆண்டுகளுக்கு முன்னர் "ஜாண் வெஸ்லி"என்ற பெயர் கொண்ட ஒரு மனிதர் இந்த கிராமத்துப் பகுதிகளுக்கு ஊழியம் செய்ய வந்தாராம்..அன்று மூடிய மதுக்கடைகள் இன்று வரை திறக்கப்படவே இல்லை" என்று மட்டும் சொல்லிவிட்டு அந்த முதிய விவசாயி திரும்பி தன் வழியே போய் விட்டார்..

கேள்வி கேட்டவர் வாயடைத்துப் போய், அதற்கு மேல் அங்கு நிற்காமல் போய் விட்டார்.

ஐம்பத்து மூன்று வருடங்கள் ஓயாமல் ஊழியம் செய்த வெஸ்லி, தம்மை "ஒரே புத்தகத்தின் மனிதன்" (வேதாகமம்) என்று அழைத்துக் கொண்டார்..

என்றாலும் அவர் 200 புத்தகங்களுக்கு மேல் எழுதினார்..ஒரு பத்திரிகை நடத்தினார்..

நான்கு மொழிகளில் மொழி அகராதிகள் தயாரித்தார்- எல்லாம் அவரது சொந்தக் கையெழுத்தில் !

ஏறக்குறைய 2,50,000 மைல்கள் தமது குதிரை மீதில் இங்கிலாந்து முழுவதும் பயணம் செய்தவர் ஒரு நாளுக்கு சராசரியாக இருபது மைல்கள்..பல நாட்களில் 50 மைல்கள் கூட பயணம் செய்து பிரசங்கித்தார்..

வழி நெடுக ஆங்காங்கே குதிரையை நிறுத்தி பிரசங்கம் செய்வார்..
மொத்தத்தில் 40,000 பிரசங்கங்கள் செய்திருந்தார் அவர். ஒரு நாளைக்குக் குறைந்தது இரண்டு, சில நாட்களில் ஏழு, எட்டு அல்லது அதற்கு மேல்!

வெஸ்லி 83 வயதான போது, தாம் ஒரு நாளைக்கு 15 மணி நேரங்களுக்கு மேல் வாசித்தாலோ எழுதினாலோ தமது கண்கள் வலிப்பதாக குறைபட்டுக் கொண்டார்..

ஒரு நாளுக்கு இரண்டு தடவைக்கு மேல் பிரசங்கம் பண்ண முடியவில்லையே..காலை 5:30 மணி வரை படுக்கையிலேயே இருக்க வேண்டும் போல் இருக்கிறதே என்றெல்லாம் அங்கலாய்த்துக் கொண்டார் அவர்..

அவருக்கு 86 வயதாயிருக்கையிலும் கூட காலை 5:30 மணிக்கே ஜெபிப்பதற்காக எழுந்து விடுவார்!

இடைவிடாத பிரயாணங்களும் உழைப்பும் ஊழியங்களும் அவரது சரீரத்தில் தங்கள் தாக்கத்தைக் காட்டத்ஊ தொடங்கியிருந்தன.

தனது 88 ம் வயதில்..

1790 ஜனவரி 1ம் தேதி அன்று அவர் எழுதுகிறார்..

"இப்போது நான்... தலையிலிருந்துஊ கால் வரை பழுதாகிப் போன வயதான ஒரு மனிதன்..என் கண்கள் மங்கி விட்டன..என் வலதுகரம் அதிகமாய் நடுங்குகிறது. காலையானால் என் வாய் வறண்டு, காய்ந்து போனது போலக் காணப்படுகிறது. ஏறக்குறைய ஒவ்வொரு நாளும் எனக்குள் ஜுரம் ஏறுவதை உணருகிறேன். என் நடை பெலவீனமாகி தளர்ந்து காணப்படுகிறது. ஆனாலும் தேவனே! இவைகளில் ஒன்றாவது நான் உமக்காக உழைக்கும் வேகத்தை என்னில் குறைக்க முடியுமோ? நான் இன்னும் பிரசங்கித்துக்கொண்டே இருப்பேன்! எழுதிக் கொண்டே இருப்பேன்!"

இதை வெஸ்லி எழுதும்போது அவருடனிருந்த ஹென்றி மூர், வெஸ்லியின் தீர்க்கத்தைக் கண்டு திகைத்துப் போகிறார்.

தன் உடல் பெலவீனப்பட்டுப் போன அந்த நிலையிலும், ஜாண் வெஸ்லி அதிகாலை நான்கு மணிக்கு எழுகிறார்.. தனது பழைய அதே ஊக்கத்திலும் சுறுசுறுப்பிலும் நம்மைத் திகைக்க வைக்கும் தீர்க்கமான வேகத்திலும் தனது நாள் முழுவதுமான பணிகளை ஒன்று விடாமல் செய்கிறார்.. அந்த நாட்களில் அவரது ஒரே ஜெபம், "ஆண்டவரே! ஒன்றுக்கும் பிரயோஜனமில்லாமல் நான் உயிர் வாழ்வும் வாழ்வு ஒன்று எனக்கு வேண்டாம் ஐயா!" என்பதே!

வெஸ்லியின் கடைசி பிரசங்கம்

பிரிஸ்ட்டல் நகரின் City Road Chapel ல் தனது கடைசிப் பிரசங்கத்தைச் செய்த வெஸ்லி, Leather headல் ஒரு வீட்டுக்கூட்டத்தில் "கர்த்தரைக் கண்டடையத்தக்க சமயத்தில் அவரைத் தேடுங்கள்...அவர் சமீபமாயிருக்கையில் அவரை நோக்கிக் கூப்பிடுங்கள்.." என்ற வசனத்தின் அடிப்படையில் பிரசங்கித்தார்..அதுவே அவர் செய்த கடைசிப் பிரசங்கம்.

வெஸ்லியின் கடைசிக் கடிதம்

தனது கடைசிக் கடிதத்தை பெப்ரவரி 24, 1791 அன்று வில்லியம் வில்பர்ஃபோர்சுக்கு (WilberForce) எழுதுகிறார் வெஸ்லி. அமெரிக்காவில் வில்பர்ஃபோர்சுடன் தங்கியிருந்த நாட்களில் கறுப்பு இன அடிமை வியாபாரத்தை முடிவு கட்ட முழு மூச்சுடன் இறங்கியிருந்த வில்பர்ஃபோர்சின் ஊழியத்தையும் அடிமை வியாபாரத்தின் பயங்கரங்களையும் கண்கூடாகக் கண்டிருந்தார் வெஸ்லி. வில்பர்ஃபோர்சின் ஊழியம், வயதான ஜாண் வெஸ்லிக்குள் மிகப்பெரிய ஒரு தாக்கத்தை ஏற்படுத்தியிருந்தது.

வெஸ்லி எழுதுகிறார்...

My Dear Sir,
அத்தனேஸியுவைப் போல தேவ வல்லமை ஒன்று உம்மை எழுப்பியிராத பட்சத்தில், இன்றைய மனித இனத்தையும், மத வைராக்கியங்களையும் எதிர்த்து, இப்படி ஒரு எதிர்ப்பு நிறைந்த சவால்களுக்கு மத்தியில் உம்மைப் போன்ற மகிமையான பணியைச் செய்வது முற்றிலும் இயலாத ஒன்று. தேவன் இந்த ஒரே ஒரு காரியத்துக்காக மாத்திரமே உம்மை எழுப்பியிராத பட்சத்தில் மனிதரும் பிசாசும் உமக்கு விரோதமாய் எழும்பியிருக்கும் இந்த நேரத்தில், அவர்களது கோபத்தில் நீர் உயிரோடு பொசுங்கியிருப்பீர் ! "தேவன் உமது பட்சத்திலிருக்கையில், உமக்கு விரோதமாயிருப்பவன் யார்? அவர்கள் எல்லாருடைய கூட்டமும் தேவனைவிட பெலமுள்ளதோ?" ஓ! 7 நன்மை செய்வதில் சோர்ந்து விடாதிருப்பீராக! 7 அமெரிக்காவின் முகத்திலிருந்து இந்த அடிமைத்தனத்தின் முகத்திரை கிழிக்கப்படும் வரை, தேவனின் நாமத்திலும், அவரது சத்துவத்தின் வல்லமையிலும் முன்னேறிப் போய்க்கொண்டே இருப்பீராக!"

உமது வாலிய நாட்கள் முதல் இதுவரை உம்மை நடத்தி வந்தவர் இப்போதும் இனிமேலும் உம்மோடிருந்து உம்மை பெலப்படுத்தி, வழி நடத்துவாராக!

ஜெபத்துடன்,
உமக்குப் பிரியமான ஊழியன்,
John Wesley

வெஸ்லியின் கடைசி நிமிடங்கள்

பெப்ரவரி 25, 1791..

வெள்ளிக்கிழமை காலை 11 மணிக்கு தன் City Road வீட்டுக்கு சுகவீனத்தோடு கொண்டுவரப்படுகிறார் வெஸ்லி. தனது அறையில் அமர்ந்தவர், அரை மணி நேரம் தன்னைத் தனியே இருக்க அனுதிக்கும்படி கேட்டுக் கொள்கிறார்..

சிறிது நேரத்தில் ஜுரம் அதிகரிக்கவே, Dr.Whitehead வரவழைக்கப்படுகிறார். "டாக்டர், இவர்கள் எல்லாம் ஏன் இவ்வளவு பயப்படுகிறார்கள்?" என்று சிரித்துக் கொண்டே டாக்டரைக் கேட்கிறார்.

அடுத்த நாள் சனிக்கிழமை ...அருகிலிருந்தவர்களின் ஓரிரு கேள்விகளுக்குப் பதில் சொல்லிவிட்டு சிறிது சிற்றுண்டி எடுத்தவர், மயக்க நிலைக்கு ஆளாகிறார்..

மறுநாள் ஞாயிறு, பெப்ரவரி 27..
காலை எழுந்தவர், தாமாகவே நாற்காலியில் அமர்ந்து,

Till glad I lay this body down
Thy Servant, Lord attend;
And oh ! my life of mercies crown
With a trumphant end..

என்ற பாடலின் ஒரு பகுதியைத் திரும்பத் திரும்ப மெதுவாக முணுமுணுக்கிறார்..

அடுத்த நாளின் அதிக நேரம் தூக்கத்திலேயே இருக்கிறார். அன்று இரவு சரியான தூக்கமின்றி இருந்தவர்,

All glory to God in the sky
And peace upon earth be restored..
என்ற பாடலைப் பாடுகிறார்.

பிறகு ஏதோ எழுதுவதற்குப் பேனாவையும் மையையும் கேட்கிறார்.

ஆனாலும் கைகள் நடுங்க, அவரால் எழுத முடியாமல் போகிறது. Miss Ritdrie என்பவர், "நீங்கள் சொல்லுங்கள், நான் எழுதுகிறேன் என்று சொல்ல, "இல்லை, ஒன்றுமில்லை..தேவன் நம்மோடிருக்கிறார்.." என்று மட்டும் சொல்கிறார்.

மார்ச் 1ம் தேதி, அவரது சகோதரர் சார்ல்ஸ் வெஸ்லியின் மனைவி அவரைப் பார்க்க வருகிறார். அவரது கையை இறுகப்பற்றிக் கொண்டவர், "கர்த்தாவே, உமக்கு நன்றி செலுத்துகிறோம், ஓ! ராஜனே! உமது சபையை ஆசீர்வதித்து அதற்கு சத்தியத்தையும் சமாதானத்தையும் அருளுவீராக!" என்ற தமது ஜெபத்தை செய்கிறார். அன்றிரவு சங்கீதம் 46 ஐத் திரும்பத் திரும்ப சொல்ல முயற்சிக்கிறார். " நான் துதிப்பேன்..இன்னும் துதிப்பேன்.." என்ற வார்த்தைகளே மெல்லிதாக அவரது வாயிலிருந்து வந்து கொண்டிருந்தது..

மார்ச் 2, 1791 அடுத்த நாள் காலை, 10 மணிக்கு சில நிமிடங்கள் முன்பதாக, வெஸ்லி தான் தேடிக் கொண்டிருந்த நீண்ட இளைப்பாறுதலுக்ஊகுள் பிரவேசிக்கும் அந்தக் கடைசி நிமிடத்தில், அப்போது அருகிலிருந்த Mr.Bradford தனக்குள்ளாக, "வாசல்களே, உங்கள் தலைகளை உயர்த்துங்கள், அநாதி கதவுகளே! உயருங்கள்.. மகிமையின் ராஜா உட்பிரவேசிக்கட்டும்...." என்று சொல்ல, வெஸ்லி தேவனுடைய பிரசன்னத்துக்குள் பிரவேசிக்கிறார்.

வெஸ்லி தனக்குப்பின் விட்டுச்சென்றவை

இரண்டு டீ ஸ்பூன்..

- ஒரு ப்ளேட்..
- சில்லறை நாணயங்கள் சில..
- தான் அணிந்திருந்த மெத்தடிஸ்ட் gown ஒன்று..
- தான் வாசித்த புத்தகங்கள் அடங்கிய நூலகம் ஒன்று..
- உலகளாவிய மெத்தடிஸ்ட் திருச்சபை ஒன்று..

வெஸ்லியின் கல்லறைக் கல்வெட்டு

"தேவனுடைய மேலான நியமத்தினாலே தேசங்களைப் பிரகாசிக்க எழும்பிய மகா ஒளி..

ஓ! வாசிப்போனே! பயன்படுத்தப்படும் கருவியைக் கொண்டாட நினைப்பாயானால், கருவியை அல்ல, அதைக் கையாடி பயன்படுத்தும் தேவனை மட்டுமே மகிமைப்படுத்துவாயாக!"

தேவனே.."பகலின் கஷ்டத்தையும் வெயிலின் உஷ்ணத்தையும் சகித்த அவர்களுக்கு எங்களை (தகுதியற்ற) சமமாக்கினீரே !!" - மத் 20:12 -

நீதிமான் மரிப்பது போல நான் மரிப்பேனாக !

அன்பின் அப்போஸ்தலன் யோவான்

அன்பின் அப்போஸ்தலனாகிய யோவான்

இயேசுவுக்கு அன்பான சீஷன்..
இராப்போஜனத்தில் அவர் மார்பில் சாய்ந்து கொண்டிருந்த யோவான்..

ஆதிமுதல் இருந்ததும்..
அவன் கேட்டதும்..
அவன் கண்களினால் நோக்கிப் பார்த்ததும்..
தன் கைகளால் தொட்டுப் பார்த்ததுமான ஜீவ வார்த்தையாகிய இயேசு கிறிஸ்துவின் சுவிசேஷத்தை வித்தியாசமாய் எழுதிய யோவான்..

பத்மு தீவிலே நாடு கடத்தப்பட்டு..
இயேசு கிறிஸ்துவினிமித்தம் வருகிற உபத்திரவத்துக்கும் பொறுமைக்கும் உடன் பங்காளனாகி..

ஒரு கர்த்தருடைய நாளிலே ஆவிக்குள்ளாகி..
பரலோகத்துக்குள் எடுக்கப்பட்டு மனுஷர் பேசப்படாததும் வாக்குக்கு எட்டாததுமான வார்த்தைகளைக் கேட்டும் கண்டும்..

சீக்கிரத்தில் சம்பவிக்கப் போகிறவைகளைத் தம் ஊழியக்காரருக்கு வெளிப்படுத்தும் பொருட்டு..தேவன் இயேசுவுக்கு ஒப்புவித்ததை
தூதன் மூலம் பெற்று..நமக்கு வெளிப்படுத்தின சுவிசேஷத்தைத் தந்த திவ்ய வாசகனாகிய யோவான்..

வெளிப்படுத்தின சுவிசேஷத்தில் காணப்படும் ஏழு சபைகளாகிய சிமிர்னா..
பிலதெல்பியா..
லவோதேக்கியா, தியத்தீரா, பெர்கமு, சர்தை மற்றும் எபேசு சபைகளை நிறுவி.. கண்காணித்து வந்த யோவான்..

குறிப்புகள் சொல்கிறது..
அவன் எபேசு சபையில் இருந்த காலத்தில் ரோம ஆட்சியாளர்களால் பிடிக்கப்பட்டு..ரோமுக்கு கொண்டு செல்லப்பட்டு அங்கே சித்திரவதையாக ஒரு பெரிய பாத்திரத்தில் கொதிக்கும் எண்ணெயில் பொரித்தெடுக்கப்பட போடப்பட்டான்..

ஆனால் அவனைக் கொண்டு செய்து முடிக்கப்பட வேண்டிய ஒரு பெரிய காரியம் தேவனுக்கு மீதியிருந்தது..

தண்ணீரில் முழுகி எழுந்தவனைப் போல..
கொதிக்கும் எண்ணெயிலிருந்து கருகின வாடை எதுவுமின்றி எழுந்து வந்தான் யோவான்..

சரித்திரம் சொல்கிறது..
டொமிஷியன் என்ற ராயனால் பத்மு தீவுக்கு நாடுகடத்தப்பட்டான் யோவான் என்று..

ஜாண் பன்னியன் பெட்போர்டு சிறையில் அடைக்கப்படாதிருந்தால் அவரது நிகரில்லா
" மோட்சப்பிரயாணம் "
நமக்கு கிடைத்திருக்குமோ?

தேவன் யோவானை பத்மு தீவுக்கு கொண்டு சென்ற நோக்கத்தை வெளிப்படுத்தின சுவிசேஷமாக நமக்கு வெளிப்படுத்தினார்..

நெர்வா ராயன் காலத்தில்
(கிபி96-98) விடுதலை செய்யப்பட்டு சின்ன ஆசியா எனப்படும் ஏஷியா மைனரில் அங்குள்ள சபைகளை உற்சாகப்படுத்தி.. உறுதிப்படுத்தி.. பயிற்றுவித்து.. தன் அந்திம காலத்திலும் ஊழியம் செய்த யோவான்..

மிக நம்பகமான ஒரு செய்திக் குறிப்பு மிக அழகான ஒரு சம்பவத்தை வர்ணிக்கிறது..

ஏறக்குறைய நூறு வயதான யோவான்..

ஒரு நாள்..ஏஷியா மைனரின் ஒரு சபை ஆராதனையில் தேவ வார்த்தை அக்கினியாய் அவரிடமிருந்து வெளிப்படுகிறது..

சபையின் பெரிய கூட்டத்தில் கூர்ந்து கவனித்துக் கொண்டிருந்த ஒரு வாலிபன் மேல் வயதான யோவானின் கண்கள் பதிகிறது..

பிரசங்க முடிவில் அந்த வாலிபனை முழு சபை முன்னிலையில் முன்பாக அழைத்து.. அந்த சபையின் மூப்பரைப் பார்த்து யோவான் சொன்னார்..

"இன்று தேவனுக்கு முன்பாகவும் சபையார் சாட்சியாகவும் இந்த வாலிபனை உம் கண்காணிப்புக்கு ஒப்புவிக்கிறேன்.. அவனைக் கர்த்தருக்குள் வளர்ப்பது உமது உத்திரவாதம்.."

"உம் வார்த்தையை ஏற்கிறேன் " என்றார் மூப்பர்

தேவ சித்தமானால் என்றாவது ஒரு நாள் திரும்பி வருவேன் என்று அங்கிருந்து கடந்து சென்றார் யோவான்..

அந்த மூப்பர் அந்த வாலிபனை தன் வீட்டுக்கு அழைத்துச் சென்று தன்னோடு வைத்துப் பராமரிக்க..
அவனும் கர்த்தருக்குள் வளர்ந்து ஞானஸ்நானம் பெற்று சபையில் அங்கமானான்..

நாட்கள் கடந்தது..
விசுவாசத்தில் தானே இருக்கிறான் என்று அந்த மூப்பரின் கண்காணிப்பு சற்று விலக..
அந்த வாலிபன் வழிவிலக ஆரம்பித்தான்..

வேண்டாத நண்பர்கள்..
தவறான வாழ்க்கை..
கடைசியில் ஒரு நாள் ஊரறிந்த கொள்ளைக்கூட்டத்துக்குத் தலைவனானான்..

சில காலம் சென்று..
யோவான் அந்த சபையை சந்திக்க வந்தார்..
பல காரியங்களை அந்த மூப்பரோடு பகிர்ந்து கொண்டவர்..திடீரென ஞாபகம் வர ..கேட்டார்..
"நான் உம்மிடம் கொடுத்து வைத்துப் போன அந்த விலையேறப் பெற்ற பொருள் எங்கே..?

விபரம் புரியாமல் அந்த மூப்பர் யோவானைப் பார்க்க..
யோவான் நேரடியாகக் கேட்டார்..
"நான் உம் பொறுப்பில் விட்டுச் சென்ற அந்த வாலிபன் எங்கே ?"

"அவன் இறந்து விட்டான்"என்று அழ ஆரம்பித்த மூப்பர் எல்லாவற்றையும் விபரமாய் சொல்ல..

கோபம் வந்து விட்டது யோவானுக்கு..
"நீர் எவ்வளவு பொறுப்பானவர் என்று நிரூபித்துவிட்டீர்" என்று கடிந்து கொண்டு குதிரை மேல் சேணம் வைத்து தனிமனிதனாக அந்தக் கொள்ளைக்கூட்ட தலைவன் இருந்த மலை நோக்கி சென்றார் யோவான்...

மலையடிவாரத்தில் அவனது காவலர்கள் தடுத்து நிறுத்த..
"என்னை உங்கள் தலைவனிடம் கொண்டு செல்லுங்கள்"என்று உறுதியான குரலில் சொன்ன யோவானை..

தலைவன் முன் கொண்டு நிறுத்தினர்..

யோவானை அடையாளம் கண்டு கொண்ட தலைவன் ஓட ஆரம்பித்தான்..

யோவான் அவன் பின்னே கைகளை விரித்தவராய்..
"மகனே ஓடாதே..
இப்போதும் நம்பிக்கை உண்டு..இயேசு இன்னும் உன்னை நேசிக்கிறார்..
திரும்பி வா.. பயப்படாதே
கிறிஸ்து நமக்காக மரித்தது போல நான் உனக்காக மரிக்கவும் தயாராக இருக்கிறேன்..
மகனே திரும்பி வா..
என்று கதற..

ஓடியவன் திரும்பி வந்து தகப்பனைப் போன்ற யோவானின் கால்களைக் கட்டிக் கொண்டான்..

கையிலிருந்த குறுவாள் கீழே விழுந்தது..
கண்ணீரோடு சொன்னான்..

மன்னியும் தகப்பனே!
சபைக்குத் திரும்பிய வாலிபன் சபையார் முன்பாக அழ..ஒரு கெட்ட குமாரனின் கதை நிஜமானது..

மரித்தவன் உயிர்த்தான்..
காணமல் போனவன் திரும்பவும் காணப்பட்டான்..
சபை மகிழ்ந்து களிகூர்ந்தது..

அப்போஸ்தலனின் கடைசி நாட்கள்...

அப்போஸ்தலனாகிய யோவான் பத்மு தீவுக்கு நாடுகடத்தப்பட்டது, கிபி 81 முதல் 95 வரை இராஜ்யபாரம் செய்த டொமிஷியன் ராயன் காலத்திலே..

அவனுக்குப் பிறகு வந்த நெர்வா ராயன் ஆண்டது என்னவோ மூன்றே வருடங்கள் தான்..(கிபி 96 - 98)

இந்த நெர்வா, தான் ஆட்சிக்கு வந்த முதல் வருடத்திலேயே அப்போஸ்தலனை விடுதலை செய்கிறான்..

விடுதலையான
யோவான், ஏஷியா மைனரிலுள்ள எபேசுவுக்கு வந்து, தனது அந்திம நாட்களை சபையோடு செலவிட்டு ஏறக்குறைய 99 அல்லது 100 வயதுடையவராய்,

இயேசு உயிரோடிருந்த நாட்களில் அவருக்கு அன்பாயிருந்து அவரது மார்பில் சாய்ந்திருந்த அவர், என்றென்றைக்குமாய் அவரது மார்பில் இளைப்பாறும்படி, சமாதானத்தோடு தனது இளைப்பாறுதலுக்குள் பிரவேசிக்கிறார்..

யோவானின் கடைசி வார்த்தைகள்..

1 யோவான்
2 யோவான்
3 யோவான்
வெளிப்படுத்தின விசேஷம்

நீதிமான் மரிப்பது போல நான் மரிப்பேனாக !



அப்போஸ்தலனாகிய பவுல்

கிறிஸ்து இயேசுவினிமித்தம் கட்டப்பட்டவனாகிய “பவுல்”

இந்த..
அப்போஸ்தலருக்கு அப்போஸ்தலனும்..
பரிசுத்தவான்களுக்கு பரிசுத்தவானும்..
தன் எழுத்துக்களாலே எழுப்புதலை எழுப்பினவனும்..

கிறிஸ்துவின் அச்சு அசலுமான..
பவுலின் நாளாகமத்தை எழுதத் துணிய பேனா
மறுக்கிறது..

தடுக்க முடியாத அவனது வேகம் கண்டு..
அவன் எதிரிகளின் தாங்க முடியாத எரிச்சலின்
வார்த்தைகள் இது..

"இவன் ஒரு கொள்ளை நோய்..
இவன் பூச்சக்கரத்தின் கலகம்..
இவன் உலகத்தைக் கலக்குகிறவன்.."

அவனால் கலங்கடிக்கப்பட்ட அசுத்த ஆவிகளின்
கதறல் இது..
“இயேசுவையும் அறிவேன் பவுலையும் அறிவேன்.."

அவன் மேல் வைத்த நம்பிக்கையில் கர்த்தராகிய இயேசு
கிறிஸ்து தாமே தந்த சாட்சி இது..

"அவன் புறஜாதிகளுக்கும் ராஜாக்களுக்கும் இஸ்ரவேல்
புத்திரருக்கும் என்னுடைய நாமத்தை அறிவிக்கிறதற்றகாக
நான் தெரிந்து கொண்ட பாத்திரம்..

அவன் என் நாமத்தினிமித்தம் எவ்வளவாய்ப் பாடுபட
வேண்டுமென்பதை நான் அவனுக்குக்
காண்பிப்பேன்"(அப்9:15,16)

ஆகவே தம்மைப் பற்றித் தாழ்மையாய் அவர் சொன்ன இந்த வார்த்தைகளினூடே அவரைப் பார்ப்பதே அவருக்கு மரியாதை..

"நான் பாவிகளில் பிரதான பாவி..
அப்போஸ்தலர் எல்லாரிலும் சிறியவன்..
அப்போஸ்தலன் என்று பேர் பெறுவதற்கு பாத்திரன் அல்ல.."

"மரணத்துக்குக் குறிக்கப்பட்டவன்..
உலகத்துக்கு வேடிக்கையானவன்..
கிறிஸ்துவினிமித்தம் பைத்தியக்காரன்.."

பசியுள்ளவன்..
தாகமுள்ளவன்..
நிர்வாணி.. குட்டுண்டவன்..
தங்க இடமில்லாதவன்..

உலகத்தின் குப்பையும்
துடைத்துப் போடுகிற அழுக்கைப் போன்றவன்..

ஆனாலும் தான் பட்ட பாடுகளையும் தன் கடிதத்தில்
இப்படித்தான்
பதிந்து வைத்தான்..

"நான் அதிகமாய்ப் பிரயாசப்பட்டவன்..
அதிகமாய் அடிபட்டவன்..அதிகமாய் காவல்களில்
வைக்கப்பட்டவன்.."

"அநேகந்தரம் மரண அவியில் அகப்பட்டவன்..
39 அடியாக 5 முறை அடிபட்டவன்..
3 முறை மிலாறுகளால்
அடிபட்டவன்.."

"ஒரு முறை கல்லெறியப்பட்டவன்..
மூன்று முறை கப்பல் சேதத்தில் மாட்டிக் கொண்டவன்.."

"அநேகந்தரம் பிரயாணம் பண்ணினவன்..
ஆறுகளால்.. கள்ளரால்..
சுயஜனங்களால்..அந்நிய ஜனங்களால் என்னென்ன
மோசம் உண்டோ எல்லாம் ஆனுபவித்துத் தீர்ந்தவன்.

2 கொரிந்தியர் 11:23-29ல்
இன்னும் நீண்டு கொண்டே போகும் பட்டியலில் அவன்
இன்னும் படாத பாடு என்ன?

வெவ்வேறு கோணங்களில் வெவ்வேறு காலங்களில்..
வெவ்வேறு தேவ மனிதர்கள் இவன் வாழ்க்கையை வரைந்து
வைத்திருந்தாலும்..

"எழுப்புதல் தாமதிப்பது ஏன்"என்று எழுப்புதலுக்கு
இலக்கணம் எழுதிய லியானோர்ட் ரேவன்ஹில்லின்
பேனாவின் சில வரிகள் பவுலைப்பற்றிப் பேசட்டும்..

பவுல் கிறிஸ்துவின் அடையாளம்.
பாடுகளே-அவன் அடையாளம்..

ரோமர் எட்டாம் அதிகாரத்தை சற்று புரட்டிப் பாருங்கள்..

பஞ்சம்.. நாசமோசம்..
நிர்வாணம்.. பட்டயம்..
உபத்திரவம்.. துன்பம்..
வியாகுலம்!
இத்தனை பாடுகளையும் இவன் எப்படித் தான் சகித்தானோ
பாவம் !

தேவனோடும் மனிதனோடும் முழு யுத்தத்தில் இறங்கிய
பாதாளத்தின் வல்லமைக்கு மாறு கொண்டு வீறு
கொண்டான்..
இந்தத் தலை சாய்க்க இடமில்லா நாடோடி..

பிசாசை நேர் கொண்டு எதிர் நின்றான்..
இந்தப் பிரசங்க மன்னன்..
சட்டமில்லா மல்யுத்தம்..

பவுலை சற்று உற்றுப் பாருங்கள்..
இதோ வாடி.. வதங்கி..
வெளுத்த முகம்..
காயத் தழும்பில் கறுத்திட்ட சரீரம்..
கொல்லும் பசியில் கூனிட்ட உடல்..

உபவாசம் போட்டு ஒடுங்கிய உருவம்..
ரோமைச் சவுக்குகளின் ஓங்கிய அடிகளில்
வீங்கிய சதைகள்..
கல்லெறி பட்டு கசங்கிய சிற்றுடல்..

பட்டினி போட்டு ஒட்டிய வயிறு..
முப்பத்தாறு மணிநேரம் மத்திய தரைக்கடலில்
ஊறிச் சுருங்கி உருக்குலைந்த தோல்..

இத்தனையும் இணைத்துப் பாருங்கள்..
அடுத்து வந்த ஆபத்துகள் எத்தனை!
தனிமையின் துயரம்..
கூட்டிக் கொள்ளுங்கள்!

195 அடிகளையும்..
மும்முறை பெற்ற மிலாறு அடிகளையும்..கப்பல்
சேதங்களையும்.. கல்லெறிதலையும்..
பெற்ற சிறை வாசங்களையும்..

நேரிட்ட மரண அவதிகளையும் கூட்டிப் பார்த்தால்..
அப்பப்பா மூளை குழம்புகிறது..

ஆனால் பவுல் இதைக்குறித்து சொல்வதைக் கேளுங்கள்:
“அதி சீக்கிரத்தில் நீங்கும் நம்முடைய இலேசான
உபத்திரவம்.."

ஆம் அவனுக்கு அவைகள் அனைத்தும் இலேசானது தான் !

துன்பத்தைத் துச்சமென்பது இது தான்-மனமிருந்தால் ஒப்புக் கொள்ளுங்கள் !

"நான் கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின்
அச்சடையாளங்களை என் சரீரத்தில் தரித்துக்
கொண்டிருக்கிறேன்"
(கலா 6:17)

பவுலின் மீது கிறிஸ்துவுக்கிருந்த உரிமையை உறுதிப்படுத்தும் வார்த்தைகளே இவை..
அவனது ஆவி.. ஆத்துமா..
சரீரம் அனைத்துமே கிறிஸ்துவினுடையதாகி விட்டன..

" பவுல் " - நரகமும் வனை நன்கு அறியும்..

"இயேசுவை அறிவேன் பவுலையும் அறிவேன்..
நீங்கள் யார் ?"

- பாதாளமும் பூலோகமும் சூட்டும் மிகப்பெரிய புகழாரம் இதுவே..

"இயேசுவும் பவுலும்" -என்ன ஒரு அற்புதமான இணைப்பு..
எதிரியே கூறும் நற்சாட்சி இது..

பவுல் இந்த சாட்சியைப் பெற்றது எப்படி?
பிசாசுகள் பவுலை அறிந்து வைத்தது எப்படி?

அவைகள் இவனைக் காயப்படுத்தினதா அல்லது இவன் அவைகளை அடித்து விரட்டினானா?
இந்த மனிதன் எப்படிப்பட்டவன் என்று சற்று பார்க்கலாமே!

தேவனும் பவுலும் இணைபிரியாதவர்கள்..
தேவ வெளிப்பாடு இவனது வாடிக்கை..
தூதர் கூட்டம் இவனது பணிவிடையாளர்கள்..

இவனது சுண்டு விரல் அசைந்தால் பூகம்பம் தான்..
இவன் கட்டளையிட...
குறி சொல்லும் ஆவி பதறிக் கொண்டு ஓடும்..

கொரிந்து பட்டணத்தின் கோர அசுத்தங்களை அழுக்கறக் கழுவி..
சாத்தானின் கோட்டை வாசலிலே சபையை நிறுவியவன்..

கொடூரமான ராயனின் குடும்பத்தில் நுழைந்து அங்கிருந்தும் ஆத்துமாக்களைக் கொள்ளை கொண்ட அசுரன்..

அரசர்களின் முன் நிற்பதில்
ஐயமில்லாதவன்..
ஏனெனில்..
"அகிரிப்பா ராஜாவே!
நான் இன்றைக்கு உமக்கு முன்பாக உத்தரவு சொல்லப் போகிற படியினாலே என்னை பாக்கியவான் என்று எண்ணுகிறேன்.."
என்றவனல்லவா அவன்!

உலகின் ஒப்பற்ற அறிவுக் களஞ்சியமாம் மார்ஸ் மேடை நோக்கி உயிர்த்தெழுதலின் உண்மையைப் புயலென வீசி..அறிஞரின் அறிவினை
தவிடு பொடியாக்கினவன்!

சுருங்கச் சொன்னால்..
பவுல் உயிரோடு இருந்ததுவரை பாதாளத்துக்கு நிம்மதியே இல்லை..பாவம்!

பவுல் சொல்கிறான்..
"பிழைத்திருக்கிறேன்..
இனி நானல்ல கிறிஸ்துவே" என்று..

வாழ்நாளெல்லாம் அவன் சாத்தானின் வல்லமைகளோடு
போராடிக் கொண்டே இருந்தான்..

தன் வாழ்நாளின் இறுதிக்கட்டத்திலும் "நல்ல
போராட்டத்தைப் போராடினேன்" என்பது தான் அவனது
பெருமிதம்!

இந்த வெற்றி முழக்கத்துக்குப் பிசாசுகளும் "ஆமென்"
சொல்லியிருக்கும்..
ஏனெனில் பவுல் அவைகளிடம் பட்டதை விட அவைகள்
அவனிடம் பட்ட பாடுகள் தான் ஏராளம்!

ஆம்.. பவுல் நரகத்திலும் நன்கு அறியப்பட்டவன்!

"நீங்கள் என்னிடத்தில் கற்றும் அடைந்தும் கேட்டும் கண்டும்
இருக்கிறவைகள் எவைகளோ அவைகளையே செய்யுங்கள்"
என்றானே..
(பிலி 4:9)

நகலிலிருந்து நகலெடுப்பது நல்லதல்ல..
ஆனால் பவுலைக் காப்பியடிப்பது தவறே அல்ல..
காரணம்..

அவன் சமூலமாய் சரணடைந்தவன்..
பரிபூரணமாய் பரிசுத்தப்படுத்தப்பட்டவன்

பூரண திருப்தி அடைந்தவன்..
ஆம்.. கிறிஸ்துவில் முழுமையானவன் !

பொல்லாத ஆவி "பவுலையும் அறிவேன்" என்று
சொன்னதைக் குறித்து ஆச்சரியப் படுகிறீர்களோ?

எனக்கென்னவோ இதில் ஆச்சரியம் இல்லை..

தமஸ்கு வீதியில் சவுல் ஒரு பிரசங்கியையோ அல்லது ஒரு பிரசங்கத்தை மட்டும் கேட்டிருப்பானேயானால்..
மீண்டும் அவனைப் பற்றி நாம் கேட்டிருக்கவே மாட்டோம்..

ஆனால் அவனோ சந்தித்தது.. கிறிஸ்துவை..

அனல் கக்கும் இந்த மார்க்கவாதி.. அங்கே கண்டது
அக்கினியால் அபிஷேகம் பண்ணும் அபிஷேக நாதனை..

விளைவு ?
சவுல் மாறினான்..
சமுதாயமே மாறிற்று !
- நன்மை நோக்கி..
(மீண்டும் ஒரு முறை இப்படிச் செய்ய மாட்டீரோ?)

நொறுங்குண்டவனாய்..
இன்னும் ஒருபடி கீழிறங்கி
தேவனின் நேர்முகத் தேர்வுக்கு அரேபியா பாலைவனம் சென்றான்..அவனது சுயம் எல்லாம் நொறுங்கியது அங்கே..
(இதைக் குறித்து விபரம் சொல்ல அவன் வாய் திறக்கவில்லை..)

பவுலின் வாழ்க்கை- அது விதிவிலக்கான வாழ்க்கை..

2 கொரி 11ஐ மீண்டும் படித்துப் பாருங்கள்..
தான் பட்ட பாடுகளை அங்கு அவன் பட்டியலிட வேண்டிய அவசியம் என்ன?
இரத்த சாட்சிகளோடு போட்டி போடவா?

அல்லது பரிசுத்தவான்களின் பெயரோடு தன் பெயரையும் தானே சேர்த்துக் கொள்ளவா?
கிஞ்சித்தும் இல்லை!

இவைகளின் அரிச்சுவடி அறியாதவன்..

கிறிஸ்துவுக்காக இவையெல்லாவற்றையும் குப்பையாய் எறிந்தவனாயிற்றே!

ஜெபத்திலும் அவன் விதிவிலக்கு தான்..
இந்த ஜெப வீரன் துன்பம் கண்டு துவளாதவன்..

ஜெபிக்கிறவன் எலும்புகள் முறுக்கேறும்!
பெருமூச்சு வெளிப்படும்!
பலமும் பரிசுத்தமும் பெருகும்!
அக்கினிப் பிழம்பாய் எரிவான்-அசையாது நிற்பான்!

கிறிஸ்துவின் வாழ்க்கை வரலாற்றை அவன்
எழுதவில்லை..ஆனால் அதை வாழ்ந்தே காட்டிவிட்டான்!

அவன் தன்னை தேவனுக்கு விற்றுவிட்டவன்..
இதயத்துடிப்பும் எண்ணமும் நடையும் வாஞ்சையும் இயேசு
இயேசு இயேசு..

ஆத்துமாக்களை விடுதலையாக்க ஆலயங்களில்
அக்கினியைப் பற்ற வைத்தான் ...

அது எழுப்புதலிலோ கலகத்திலோ போய் முடிந்தது..சில
வேளைகளில் இரண்டும்..
(நமக்கோ இரண்டும் கிடையாது)

கிறிஸ்துவில் இணைந்த பவுலைப் போல செயல் வேகம் இல்லை என்றாலும் சேவைத் தியாகத்திலாவது அவனைப் போலாக அவனை நிரப்பிய ஆவியானவர் நம்மையும் நிரப்புவது நிச்சயம் என்பதை சவாலாகக் கொள்ளுவோம்!

பவுல் மகிமையாய் வாழ்ந்தான்..வெற்றியாய் மடிந்தான்!
தியாகத்திலும் பாடுகளிலும் தன்னைக் கிறிஸ்துவோடு
இணைத்துக் கொண்டதே இதின் இரகசியம்..

நாமும் அப்படியே வாழ்ந்து மரிக்கலாம்-விரும்பினால்!

" பவுல் " ரோம் நகர் காவல் கிடங்குகளில்..

"இந்த சுவிசேஷத்தினிமித்தம் நான் பாதகன் போலக் கட்டப்பட்டு துன்பத்தை அனுபவிக்கிறேன்.."
(2 தீமோ 2:9)

எருசலேமில் கைது செய்யப்பட்ட பவுல்..
கொண்டு போகப்பட்டது ரோம் நகருக்கு..
ராயனுக்கு முன்பாக நிற்க..

ஆரம்பத்தில் சிறைக் கைதியாக இல்லாவிட்டாலும்..
விசாரணைக் கைதியாக வீட்டுக் காவலில் 2 வருடம் ஒரு ரோம சிப்பாயுடன் கட்டப்பட்டு 24×7
காவலில் இருந்த பவுல்..
மற்றவர்களை சந்தித்துப் பேச அனுமதிக்கப்படுகிறார்..

விசாரணை முடிந்து விடுவிக்கப்பட்டவர்..
சென்றது..தான் மிகவும் விரும்பிய ஸ்பெயின்
நாட்டுக்கு..நான்காவது மிஷினரிப் பயணமாக..

அங்கிருந்து துரோவாவுக்கு சென்று தீத்துவை
சந்தித்தவர்..பிலமோன் மற்றும் ஒநேசிமுவுடன் சில நாட்கள்
சந்தோஷமாய் இருந்துவிட்டு..எபேசுவுக்குச் சென்று
தீமோத்தேயுவுடன் தங்குகிறார்..

இந்த விடுதலை அதிக நாட்கள் நீடிக்கவில்லை..

நீரோ காலத்தில் மறுபடியும் கைதுசெய்யப்பட்டு
துரோவாவிலிருந்து ரோமுக்கு சங்கிலிகளால் கட்டி இழுத்து
வரப்படுகிறார் பவுல்..

ரோமுக்குக் கொண்டு வரப்பட்ட பவுல் அடைக்கப்பட்டது
மேமரின்ட்டைன் ஜெயில் என்ற பாதாளக் கிடங்கில்..

இன்று நம் காலத்து ஜெயில்களைப் போல் அல்ல அன்றைய ரோம சிறைச்சாலைகள்..

கேப்பிட்டோலின் குன்றுகள் என்ற மலை அடிவாரத்தில் கிமு 640-616 ல் அர்க்குஸ் மர்ஷியஸ் என்ற ரோம மன்னனால் கட்டப்பட்ட பாதாளக் கிடங்கு இது..

தரைக்குக் கீழே 12 அடி ஆழத்தில் தலைக்கு மேல் க்லோவா மேக்ஸிமா என்ற ரோம் நகரின் பாதாளச் சாக்கடை ஓட..அந்தப் பாதாளச் சாக்கடைக் குழாய்க்குக் கீழே 6.5 அடி உயரமும் 30×22 அடி அளவில் கட்டப்பட்ட இருண்ட..நாற்றம் எடுத்த..எப்போதும் ஈரமாகவே வைக்கப்பட்டிருக்கும் கோணல் மாணலான போனால் திரும்பி வர முடியாத மரணக் கிடங்கு..

தரையில் உள்ள சிறு துவாரம் மூலமாகக் கைதிகள் பாதாளச் சிறையில் தள்ளப்படுவார்கள்..

இங்கிருக்கும் இரும்புக் கதவு வழியாக டைபர் நதியில் செத்த கைதிகள் எறிந்து விடப்படுவதுண்டு..

பேதுருவும் பவுலும் இங்கே தான் வைக்கப்பட்டிருந்ததாக வரலாறு..

இங்கிருந்து தான் தன் கடைசி நிருபங்களை எழுதுகிறார் பவுல்..

கடைசியாக எழுதியது தீமோத்தேயுவுக்கு எழுதிய மிக அருமையான இரண்டாம் நிருபம்..

"நான் இப்பொழுதே பானபலியாக வார்க்கப்பட்டுப் போகிறேன்..நான் தேகத்தை விட்டுப் பிரியும் காலம் வந்தது.." (4:6)

மரணத்துக்கு சில மாதங்களுக்கு முன் எழுதப்பட்ட வரிகள் இவை..

டஞ்சன் ஜெயிலில் நாட்கள் நகர்கின்றன..

ஒரு நாள்..
ஜூன் மாத ஆரம்பமாய் இருக்கலாம் என்று சொல்கிறார்கள்..

சிறைக்கதவு திறக்கப் படுகிறது..
வெளியே கொண்டு வரப்படுகிறார் பவுல்..

கொலையாளிகள் முன் செல்ல..
வயதான தேவ மனிதன்..
நகரத்துக்கு வெளியே சங்கிலிகள் பிணைக்கப்பட்ட நிலையில் கொண்டு செல்லப் படுகிறார்..
கொலைக் களத்துக்கு..

நகரத்துக்கு பல மைல்கள் தள்ளி..
ஆஸ்ட்டியன் ரோடு என்ற இடம்..

கழுத்துப் பலகை வைக்கப் படுகிறது..
"என் ஓட்டத்தை சந்தோஷமாய் முடிக்க விரும்புகிறேன்" என்றாரே!..

பலகையில் தலையை சந்தோஷமாய் நீட்டிக் கொடுக்க..
கோடரியோ..வாளோ ஓங்கப் படுகிறது..

"அவன் என் நாமத்தினிமித்தம் எவ்வளவாய்ப் பாடுபட வேண்டும் என்பதைக் காட்டுவேன்"என்று தமஸ்கு வீதியில் பிடிபட்ட போது சொன்னாரே..

இதோ..
இந்த ஆஸ்டியன் வீதியில்.. த
லை தரையில் உருண்டு விழ..

அப்போஸ்தலனின் போராட்டம் ஜெயமாய் முடிகிறது..

சரித்திரம் சொல்கிறது..
லூசினா என்ற ரோம விசுவாசி ஆஸ்டியன் ரோட்டுக்கு அருகிலுள்ள தன் நிலத்தில் அப்போஸ்தலனின் உடலை அடக்கம் பண்ணுகிறார்..

தகப்பனே..
எங்களுக்கு அன்பானவர்களின் கடைசி வார்த்தைகள் எங்களுக்கு எவ்வளவு அருமையாய் இருக்க..

"நல்ல போராட்டத்தைப் போராடினேன்..ஓட்டத்தை முடித்தேன்..
விசுவாசத்தைக் காத்துக் கொண்டேன்.."என்ற அப்போஸ்தலருக்கெல்லாம் அப்போஸ்தலனான தேவ மனிதனின் கடைசி வார்த்தைகள் எங்களை அசைக்காதோ?

சபையை அதின் அஸ்திபார உபதேசங்களுக்குத் திருப்புவீராக!
செய்யும் ஐயா!

ஆமென்.

AN ARTICLE BY

அடைபட்ட
அக்கினி

Pastor. Romilton
Delhi
Mob: +91 98106 46981